தமிழ்நாட்டிற்கு துரோகம் செய்து இந்தித் திணிப்பிற்கு துணை போகும் பா.ஜ.க.வினருக்கு

குஜராத் - உத்திரபிரதேசத்தில் குடியேற ரயில் டிக்கெட் அனுப்பும் போராட்டம்!

ஆர்.எஸ்.பாண்டியன், - எம்.பி. எடிசன் பங்கேற்றனர்

திருவாரூர்,மார்ச்07. திருவாரூர் மாவட்டம் திருத்துறைப்பூண்டி நகரத்தில், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் எம்.பி.எடிசன் ஏற்பாட்டில் மாவட்ட கழக செயலாளர் பூண்டி கே. கலைவாணன் எம்.எல்.ஏ. ஆலோசனையின்படி தமிழ்நாட்டிற்கும்,தமிழ் மொழிக்கும் துரோகம் செய்து, இந்தி திணிப்பிற்கு துணை போகும் பா.ஜ.க.வினர் குஜராத், உத்திரபிரதேசத்தில் குடியேற ரயில் டிக்கெட் எடுத்து அனுப்பும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

திருத்துறைப்பூண்டி நகர கழக செயலாளரும் தலைமை செயற்குழு உறுப்பினருமான ஆர். எஸ். பாண்டியன் முன்னிலையில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்திற்கு, திருவாரூர் மாவட்ட திமுக இளைஞரணி துணை அமைப்பாளர் எம்.பி.எடிசன் தலைமை ஏற்றார்.

திருத்துறைப்பூண்டி தலைமை தபால் நிலையம் எதிரில் நடைபெற்ற ஆர்ப்பாட்ட நிகழ்வில், முன்னணி மாநில பா.ஜ.க நிர்வாகிகள் குஜராத், உத்தர பிரதேசம் உள்ளிட்ட மாநிலங்களுக்கு போய் குடியேறுவதற்காக ரயில் டிக்கெட் முன்பதிவு செய்யப்பட்டு, அந்த டிக்கட்டுகள் அஞ்சல் வழியாக அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில்,மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் விமல், நகர இளைஞர் அணி அமைப்பாளர் வசந்த், மாவட்ட சார்பு அணி துணை அமைப்பாளர் சிக்கந்தர், தகவல் தொழில் நுட்ப அணி டி.வி.பி.குணா, பாசித், மற்றும் நகரக்கழக நிர்வாகிகள், கல்லூரி மாணவர்கள், இளைஞர்கள் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.

சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் வடக்கு பகுதி,146 வது வட்டத்தில் சென்னை தெற்கு மாவட்ட செயலாளரும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சருமான மா.சுப்பிரமணியன் வழிகாட்டுதலின்படி முதல்வர், கழகத் தலைவர் அவர்களின் பிறந்தநாளை வட்டக் கழக செயலாளர் மதுரவாயல் எம்.ரூபன் தலைமையில் ராஜீவ் காந்தி நகரில் ப. சிவகுமார் ஏற்பாட்டில மதுரவாயல் வடக்கு பகுதி கழக செயலாளர், வளசரவாக்கம் மண்டலக்குழு தலைவருமான நொளம்பூர் வே.ராஜன் கலந்து கொண்டு கழக கொடி என்னை ஏற்றி வைத்து 500 நபர்களுக்கு உணவு வழங்கினார். நிகழ்ச்சியில் தீ.பாலாஜி, பி.சங்கர், தினகரன் சண்முகம், எம்.சங்கர், டி.எஸ். மகாதேவன், வ.கண்ணன் ஏ.மணிகண்டன், எம்.அக்பர்ஷரீப், ஏ. செல்வம்,ஓ.கோபி, எம்.பிரகாஷ், எம். சுப்பு.கி.சுதாகர், ஏ. ராமதாஸ், சி.கே. சுப்பிரமணி,எம். மோகன்ராஜ், வி. லிங்கம்,ஆர்.மணிகண்டன் ஆர். சதீஷ்குமார் ,என். செல்வராஜ்,டி பரத்குமார்,ஏ. கணேசன், கே. சேகர், ஏ. மோகன்ராஜ் ராஜ்குமார், எஸ். ஆறுமுகம், ஏழுமலை,முரளி, டி.சகாயம், டி. முரளிகிருஷ்ணன், விக்கி,ராகுல்,உள்ளிட்ட கழக தோழர்கள் கலந்து கொண்டனர்.

த.மணிகண்டன் தலைமை! மு.ராசா கே.கண்ணன் முன்னிலை! ஏ.எம்.வி.பிரபாகர் ராஜா – க.தனசேகரன் பங்கேற்பு!

விருகம்பாக்கம் தொகுதியில் - இளைஞர் அணி சார்பில் ஒன்றிய அரசைக் கண்டித்து மாபெரும் பொதுக்கூட்டம்!

அமைச்சர் மா.சுப்பிரமணியன் – நா.எழிலன் – டெக்சின் ரொமேரியோ சிறப்புரை!

சென்னை, மார்ச். 7 - சென்னை தெற்கு மாவட்டம், கலைஞர் நகர் வடக்கு பகுதி இளைஞர் அணி சார்பில் இந்தி திணிப்பு - நிதி பகிர்வில் பாரபட்சம் - தொகுதி மறுசீரமைப்பு குறித்து கண்டித்து மாபெரும் கண்டன பொதுக்கூட்டம் இன்று (07.03.2025 - வெள்ளிக்கிழமை) மாலை 6 மணிக்கு, விருகம்பாக்கம், ஏரிக்கரையில் பகுதி அமைப்பாளர் ந.மணிகண்டன் தலைமையில் பகுதிக் கழகச் செயலாளர்கள் மு.ராசா, கே.கண்ணன் ஆகியோர் முன்னிலையில், வட்டக் கழகச் செயலாளர்கள் மு. கோவிந்தராசன், வழக்கறிஞர் வீ.ஏ.ராஜா, பொன். வர.லோகு, எஸ்.மைக்கல், பழக்கடை பாஸ்கர், தஞ்சை பாபு ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

இந்நிகழ்ச்சியில் மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் மா.சுப்பிரமணியன், கழக மருத்துவர் அணிச் செயலாளர் நா.எழிலன் எம்.எல்.ஏ, டெக்சின் ரொமேரியோ ஆகியோர் சிறப்புரை ஆற்றுகின்றனர்.

மேலும் இக்கூட்டத்தில் தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன், கழக இளைஞர் அணி துணைச் செயலாளர் எஸ். ஜோயல், விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் ஏ. எம்.வி.பிரபாகர் ராஜா, கணக்கு நிலைக் குழுத் தலைவர் க.தனசேகரன் பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.

இதில் மாமன்ற உறுப்பினர் ரத்னா லோகேஸ்வரன், மாநில வர்த்தகர் அணிச் செயலாளர் காசி முத்துமாணிக்கம், தலைமை பொதுக்குழு உறுப்பினர் உ.துரைராஜ், எஸ்.டி.தங்கராஜ், பி.எஸ்.முருகேசன், மாவட்ட கழக துணைச் செயலாளர் வாசுகி பாண்டியன், வட்டக் கழகச் செயலாளர் பூக்கடை பழனிச்சாமி, இரா.சொழியன், பி.கே.குமார், அ.கதிரேசன், வழக்கறிஞர் சதிஷ் கண்ணன், செந்தில்குமார், ஜம்பு முருகன், மாவட்ட அமைப்பாளர் சசிகுமார் கனிமொழி தனசேகரன், நிஷா சையத், பகுதி இளைஞர் அணி அமைப்பாளர் சி.எச். தினேஷ், பகுதி துணை அமைப்பாளர் பொன். சேகர், சகயாம், விக்னோஷ், நிர்மல்குமார், ஜெகதீஸ்வரன், யுவராஜ், பிரபு, சரவணன், பாலமுருகன், நவின், தென்னரசு, சுந்தர் உள்ளிட்ட கழகத்தினர் பலர் கலந்து பங்கேற்கின்றனர்.

பகுதிக் கழகச் செயலாளர் ஏ.ஆர்.பி.எம்.காமராஜ் தலைமையில்

திருவல்லிக்கேணி பகுதி தி.மு.க. சார்பில் தண்ணீர் - நீர்மோர் பந்தல் திறப்பு!

மாவட்டக் கழகச் செயலாளர் நே.சிற்றரசு எம்.சி. திறந்து வைக்கிறார்!

சென்னை, மார்ச். 7 - சென்னை மேற்கு மாவட்டம், திருவல்லிக்கேணி பகுதி தி.மு.க. சார்பில் தண்ணீர் - நீர் மோர் பந்தல் திறப்பு விழா இன்று (07.03.2025 - வெள்ளிக்கிழமை) காலை 10 மணிக்கு, சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் அருகில் நடைபெறுகிறது.

திருவல்லிக்கேணி பகுதிக் கழகச் செயலாளர் ஏ.ஆர்.பி.எம்.காமராஜ் தலைமை வகிக்கிறார்.

சென்னை மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் நே.சிற்றரசு எம்.சி. கலந்து கொண்டு தண்ணீர் மற்றும் நீர்மோர் பந்தலை திறந்து வைக்கிறார்.

இந்நிகழ்ச்சியில் வீ.பி. பொன்னரசு, ஆர்.என். துரை, ஆர்.சுபேர்கான், வி.என்.ராஜன், ப.பிரகாஷ், ஏ.விஜயராஜ், இ.இளம்பாரதி, வே.கமலா செழியன், ரவி, ராஜ்குமார், எம்.கே.ஆனந்த், ம.தயாநிதி, கே.திருநாவுக்கரசு, சி.தினகரன், ரா.பத்மாவதி, எம்.பிரேம் ராஜா, எம்.சங்கர், ஜெ.விஜயகுமார், க. வே.மோகன், என்.ரவி, கே.பிரபு, கே.ஜி.செந்தில்குமார், எஸ்.சசிகுமார், எம். கலில் ரகுமான், ஆர்.சசிகுமார், வெ.சீனிவாசன், ஆர். கஜேந்திரன், மா.பச்சையப்பன், எஸ்.விஜயகுமார், ஏ.பி.வேலு, ஆர்.ராஜ்குமார், எல்.துளசிராமன், வி.தினேஷ்குமார் மற்றும் கலைஞர் கழகத் தோழர்கள் பெருந்திரளாக கலந்து கொண்டு சிறப்புக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு திருவல்லிக்கேணி பகுதிக் கழகச் செயலாளர் ஏ.ஆர்.பி.எம்.காமராஜ் தெரிவித்துள்ளார்.

மாதவரத்தில் புதிய எரிவாயு தகனமேடை!

சென்னை மாநகராட்சி அறிவிப்பு!

சென்னை,மார்ச்.7- பெருநகர சென்னை மாநகராட்சி, மாதவரம் மண்டலம்,

வார்டு 31க்குட்பட்ட பாரதியார் தெரு, கதிர்வேடு மற்றும் வார்டு-32க்குட்பட்ட பாரத் நகர், கடப்பா சாலை ஆகிய இரண்டு மயான பூமிகளில் எரிவாயு தகனமேடை புதியதாக கட்டப்படுவதால், 06.03.2025 முதல் 05.11.2025 வரை மேற்கண்ட மயானபூமியில் புதைத்தல் மற்றும் எரியூட்டும் பணி தற்காலிகமாக நிறுத்தப்படுகிறது.

எனவே, பாரதியார் தெரு, கதிர்வேடு மற்றும் பாரத் நகர், கடப்பா சாலை ஆகிய மயானபூமிகளில் எரிவாயு தகனமேடைகள் கட்டும் பணிகள் நடைபெறும் நாட்களில், பொதுமக்கள் மாதவரம் மண்டலம், வார்டு24க்குட்பட்ட புழல் மயான பூமி மற்றும் வார்டு 30க்குட்பட்ட விநாயகபுரம் மயானபூமிகளை பயன்படுத்திக் கொள்ளுமாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72 வது பிறந்த நாளையொட்டி, தி.மு.க. சட்டத்துறை மற்றும் திருவொற்றியூர் சார்பு நீதிமன்ற தி.மு.க. வழக்கறிஞர்கள் சார்பில் நீதிமன்றத்தில் வழக்கறிஞர்களுக்கு சட்டப் புத்தகங்கள், அறுசுவை உணவு வழங்கும் நிகழ்ச்சி அரசு வழக்கறிஞர் எஸ். பொன்னிவளவன் ஏற்பாட்டில் நடைபெற்றது. டாக்டர் ஜி.சந்திரபோஸ் தலைமையில் வழக்கறிஞர் கவி கணேசன், வழக்கறிஞர் வை.ம.அருள்தாசன் ஆகியோர் முன்னிலையில் வகித்தனர். அரசு வழக்கறிஞர்கள் என்.ஜெய்சங்கர் மற்றும் எஸ்.பொன்னிவளவன் வரவேற்புரையில் கழக சட்டத்துறைச் செயலாளர் மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ எம்.பி, சென்னை வடகிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர், மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ, கே.பி.சங்கர் எம்.எல்.ஏ, தி.மு.தனியரசு எம்.சி. ஆகியோர் கலந்து கொண்டு 250 நபர்களுக்கு அறுசுவை உணவு வழங்கினர். மேலும் கே. லஷ்மிகாந்தன், ஷோபனா, பாலமுருகன், வழக்கறிஞர் பொன்.கோ.விஜயன் பங்கேற்று கேக் வெட்டி, இனிப்பு வழங்கி, பிரியாணி மற்றும் இளம் வழக்கறிஞர்களுக்கு சட்டப் புத்தகங்கள் வழங்கி சிறப்பித்தனர்.

சென்னை வடகிழக்கு மாவட்டம். சோழவரம் தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பாக மாவட்ட கழக செயலாளரும், மாதவரம் சட்டமன்ற உறுப்பினருமான மாதவரம் எஸ்.சுதர்சனம் ஆலோசணைப்படி தமிழக முதல்வரும் கழக தலைவருமான தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழா பாடியநல்லூர் ஊராட்சியில் அடங்கிய பாடியநல்லூர் காலனி பகுதியில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் சோழவரம் தெற்கு ஒன்றிய செயலாளர் மீ.வே.கர்ணாகரன் கழகக் கொடியேற்றி மதிய உணவு பிரியாணி வழங்கினார். உடன் ஒன்றிய நிர்வாகிகள் ஏ.காசீம் முகம்மது, கே. எம். துரைவேல், கே.வீரம்மாள், பா.சேகர், ந.பரசுராமன், சி.ஆலயசாமி, மாலதிமகேந்திரன், என்.கல்பனாதேவி, ஆர்.நாகராஜ், எஸ்.வினோத்குமார், எஸ்.சேகர், ஆர்.ராதாகிருஷ்ணன், ஏ.அன்பு, கே.எழில், எஸ்.மணிகண்டன், பி.தமிழசெல்வன் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சியை கிளைச் செயலாளர் எஸ்.நாகராஜ் சிறப்பாக ஏற்பாடு செய்தார்.

அரியலூர் மாவட்டத்தில்

கல்லூரி மாணவ, மாணவியருக்கான பேச்சுப் போட்டி!

அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்தார்!

அரியலூர்,மார்ச்.7- அரியலூர் மாவட்டம், தத்தனூர் மீனாட்சி இராமசாமி கல்லூரியில் தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையம் சார்பில் கல்லூரி மாணவ, மாணவியருக்கான பேச்சுப் போட்டியினை போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர் , மாநில சிறுபான்மையினர் ஆணைய ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர். கான்ஸ்டன்டைன் ரவீந்திரன் ஆகியோர் நேற்று (06.03.2025) துவக்கி வைத்தார்கள்.

இந்நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.இரத்தினசாமி, தலைமையில், அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா , ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க. சொ.க.கண்ணன் முன்னிலையில் நடைபெற்றது.

மாணவ, மாணவியருக்கான பேச்சுப்போட்டியினை துவக்கி வைத்து போக்குவரத்துத்துறை அமைச்சர் பேசியதாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி தமிழ்நாட்டில் கல்லூரி மாணவர்களிடம் கொண்டு சேர்க்க தமிழ்நாடு சிறுபான்மையினர் ஆணையம் தமிழ்நாட்டிலுள்ள அரசு அங்கீகாரம் பெற்ற அனைத்து கல்லூரிகளின் மாணவர்களுக்காக தமிழிலும், ஆங்கிலத்திலும் பேச்சுப் போட்டிகளை நடத்தி வருகிறது. அந்த வகையில் இன்றைய தினம் தத்தனூர் மீனாட்சி இராமாசமி கல்லூரியில் தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையத்தின் சார்பில் கல்லூரி மாணவ, மாணவியருக்கான பேச்சுப் போட்டிகள் துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி இளம் தலைமுறையினரின் பேச்சு திறமைகளை வளர்ப்பதற்கு பல்வேறு துறைகளின் வாயிலாக இத்தகைய முன்னெடுப்புகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் தலைசிறந்த பேச்சாளர்களை கல்லூரிகளுக்கு அனுப்பி உரையாற்றும் வாய்ப்பும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மாணாக்கர்களுக்கு படிப்பின் மீது அதிக ஆர்வத்தினை ஏற்படுத்தும் வகையில் தமிழ்நாட்டில் மாவட்டங்கள் தோறும் அரசின் சார்பில் புத்தகத் திருவிழாக்கள் நடத்தப்பட்டு வருகிறது.

அரியலூர் மாவட்டம், தத்தனூர் மீனாட்சி இராமசாமி கல்லூரியில் தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையம் சார்பில் கல்லூரி மாணவ, மாணவியருக்கான பேச்சுப் போட்டியில் போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் அவர்கள் முன்னிலையில் மாநில சிறுபான்மையினர் ஆணைய ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர்.கான்ஸ்டன்டைன் ரவீந்திரன் உரையாற்றினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.இரத்தினசாமி, , அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா அவர்கள். ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன் மற்றும் பலர் உள்ளனர்.

பேரறிஞர் அண்ணா முதலமைச்சராக இருந்தபோது தமிழ்நாட்டில் இருமொழிக் கொள்கை அறிமுகப்படுத்தப்பட்டது. தாய்மொழி வாயிலாக எந்த அளவு கல்வி பெறுகிறமோ அந்த அளவிற்கு நமது அறிவுதினை வளர்த்துக் கொள்ளமுடியும். அதே போன்று உலக அளவில் பெரும்பாலான நாடுகளில் ஆங்கிலம் இணைப்பு மொழியாக உள்ளது என்பதை அறிந்து 55 ஆண்டுகளுக்கு முன்பாக பேரறிஞர் அண்ணா தீர்க்கதரிசியாக முடிவை எடுத்துள்ளார்கள். அதன் பயனாக நமது மாணவர்கள் உலக அளவில் கணினி துறையில் சிறந்து விளங்குகின்றனர். அந்த வகையில் தமிழ் மொழியின் மீது ஆர்வம் கொண்டு தமிழ் மொழியில் பயில வேண்டும். மாணவர்கள் இதுபோன்ற பேச்சுப் போட்டிகளை உரிய முறையில் பயன்படுத்தி தங்களது திறமைகளை வளர்த்துக் கொள்ளவேண்டும். கல்லூரிகளில் படிக்கும் பாடநூல்களைத் தாண்டி பிற நூல்களையும் மாணவர்கள் கற்று தங்களது அறிவுத்திறனை வளர்த்துக் கொள்ளவேண்டும். இதன் மூலம் மாணவர்கள் வருங்காலத்தில் உயர்ந்த நிலையை அடைய முடியும் என போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் பேசினார்.

பின்னர், மாநில சிறுபான்மையினர் ஆணைய ஒருங்கிணைப்பாளர் பேசியதாவது:

இன்றைய மாணவர்களிடம், நமது மொழியின் சிறப்பு குறித்தும், கலை, இலக்கியம் உள்ளிட்ட பல்வேறு தகவல்களை கொண்டு சேர்க்கும் வகையில் இது போன்ற பேச்சுப்போட்டிகள் நடத்தப்பட்டு வருகிறது. தமிழ் மற்றும் ஆங்கிலம் பேச்சுப் போட்டிகளில் கல்லூரி மாணவ, மாணவியர் அதிக அளவில் கலந்துகொள்வது மகிழ்ச்சியளிக்கிறது. நம் தாய்மொழி தமிழ் மற்றும் ஆங்கிலம் கற்பதன் மூலம் உலகளவில் தமிழர்களால் சிறந்த ஆளுமைகளாக விளங்க முடியும் என்பதே பேரறிஞர் அண்ணா கண்ட கனவாகும்.

ஆங்கில பேச்சுப்போட்டியில் கலந்து கொண்டால் வார்த்தை அமைப்பதிலும், உச்சரிப்பிலும் தயக்கம் மாணவர்களிடத்தில் உள்ளது. எனவே, அதை மாற்றிக் கொண்டு நாம் ஆங்கிலத்திலும் பேச முன்வர வேண்டும். மேலும், மாணவர்கள் இது போன்ற போட்டிகளில் அதிக அளவில் கலந்து கொண்டு தங்களது தனித்திறமைகளை மேம்படுத்திக் கொள்வதுடன் வருங்காலத்தில் சிறந்த நபர்களாக உருவாகி வீட்டிற்கும், நாட்டிற்கும் சேவையாற்ற வேண்டும் என மாநில சிறுபான்மையினர் ஆணைய ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர். கான்ஸ்டன்டைன் ரவீந்திரன் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் உமாமகேஸ்வரன், உடையார்பாளையம் வருவாய் கோட்டாட்சியர் திருமதி.ஷீஜா, ஜெயங்கொண்டம் வட்டாட்சியர் சம்பத்குமார், தத்தனூர் மீனாட்சி இராமசாமி கல்வி நிறுவனங்கள் தாளாளர் எம். ஆர்.ரகுநாதன், பேச்சுப் போட்டி மாவட்ட ஒருங்கிணைப்பாளர் எஸ்.ஆர்.இராமராஜன் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

சென்னை வடக்கு மாவட்டம், இராயபுரம் மேற்குப் பகுதி 48 வது வட்டக் கழகம் சார்பில் இரா.பாலன் ஏற்பாட்டில் நடைபெற்ற கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாள் மாபெரும் பொதுக்கூட்டம் – பள்ளி மாணவிகளுக்கு ஊக்கத்தொகை நல திட்ட உதவிகளை திராவிட கழகத் துணை பொதுச் செயலாளர் வழக்கறிஞர் மதிவதனி, மாவட்டப் பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி., இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம்ஸ் ஆர்.மூர்த்தி எம்.எல்.ஏ., ஆகியோர் வழங்கி சிறப்புரையாற்றினர். இதில் பகுதி செயலாளர் வ.பெ.சுரேஷ், தலைமைச் செயற்குழு உறுப்பினர் த.இளைய அருணா, ந.மனோகரன், பி.டி.பாண்டி செல்வம், என்.மருது கணேஷ், மு.கோபி, க.நாகம்மை, சண்முகம், வே.சிவக்குமார், மாமன்ற உறுப்பினர்கள் விஜயலட்சுமி, விஜயகுமார், கீதா சுரேஷ், பகுதி நிர்வாகிகள் கு.ரமேஷ், எம்.கே.இஸ்மாயில், எஸ்.திருஞானம், இ.மதன், வி.மலையம்மாள், வட்டசெயலாளர் எம்.ரவி, எஸ்.புகழேந்தி, பி.கொரியர், பி.முருகன், பாலா லக்ஷ்மணன், ஜெ.கௌரிஸ்வரன் மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.